
# தியாகி இமானுவேல் சேகரனுக்கு பரமக்குடியில் சிலையுடன் மணிமண்டபம் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு



இமானுவேல் சேகரன்

**சென்னை**: சுதந்திரப் போராட்டத் தியாகி இமானுவேல் சேகரனாரின் 66-வதுஆண்டு நினைவு தினம் நேற்று அனுசரிக்கப்பட்டது. இதையொட்டி, பரமக்குடியில் அரசு சார்பிலும், பல்வேறு கட்சிகள் சார்பிலும் அவரது நினைவிடத்தில் மரியாதை செலுத்தப்பட்டது.

தியாகி இமானுவேல் சேகரனாருக்கு திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்க வேண்டும் என்பது அப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்தது. இந்நிலையில் தேவேந்திர குல வேளாளர் கல்வியாளர் குழு, தேவேந்திரர் பண்பாட்டுக் கழகம், இமானுவேல் சேகரனாரின் மகள் சூரிய சுந்தரி பிரபா ராணி மற்றும் பேரன் சக்கரவர்த்தி ஆகியோர் முதல்வரை நேரில் சந்தித்து மணிமண்டபம் அமைக்க கோரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து முதல்வர் மு.க. ஸ்டாலின் வெளியிட்ட அறிவிப்பில்கூறியிருப்பதாவது:

**நீண்டநாள் கோரிக்கை நிறைவேற்றம்:** தியாகி இமானுவேல் சேகரனார் கடந்த 1924-ம் ஆண்டு அக்.9-ம் தேதி பிறந்தார். இவரது சொந்த ஊர் முதுகுளத்தூர் வட்டம், செல்லூர் கிராமம் ஆகும். இவர் 1942-ல் ஆங்கிலேயர்களுக்கு எதிராக வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் கலந்துகொண்டு சிறைவாசம் சென்றார். மேலும் ஒடுக்கப்பட்டோர் விடுதலைக்காகவும் போராடினார்.

இந்நிலையில் பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், தியாகி இமானுவேல் சேகரனாரின் சமூக பங்களிப்பைப் போற்றும் வகையில் அவரது பிறந்தநாள் நூற்றாண்டையொட்டி அவர் நல்லடக்கம் செய்யப்பட்ட ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ரூ.3 கோடி மதிப்பில் இமானுவேல் சேகரனாருக்கு திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் தமிழ்நாடு அரசின் சார்பில் கட்டப்படும். இவ்வாறு அவர் அறிவித்துள்ளார்.

இதற்கிடையே, முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது சமூக வலைதளப் பக்கத்தில், "ஒடுக்கப்பட்டோரின் விடுதலைக்காக போராடிய தியாகி இமானுவேல் சேகரனாரின் நினைவு நாளில் அவரது போராட்ட வாழ்வையும், சமுதாய பங்களிப்பையும் நினைவுகூர்ந்து போற்றுகிறேன்" என தெரிவித்துள்ளார்.

## கோபால்ட், நிக்கல், மாங்கனீஸ் இருக்கிறதா என வங்கக் கடலில் ஆய்வு செய்ய ‘சமுத்ரயான்’ திட்டம்




கோப்புப்படம்

**புதுடெல்லி:** கோபால்ட், நிக்கல், மாங்கனீஸ் உள்ளிட்ட தாதுப் பொருட்கள் வங்கக் கடலில் இருக்கிறதா என ஆய்வு செய்ய ‘சமுத்ரயான்’ திட்டத்தை செயல்படுத்த தேசிய கடல் தொழில்நுட்பக் கழக விஞ்ஞானிகள் தயாராகி வருகின்றனர்.

சந்திரயான்-3, ஆதித்யா எல்1 ஆகிய விண்கலங்களை இஸ்ரோ சமீபத்தில் வெற்றிகரமாக ஏவி சாதனை படைத்தது. அந்த வகையில், ஆழ்கடல் திட்டத்தின் ஒரு பகுதியாக, தேசிய கடல் தொழில்நுட்பக் கழகம் (என்ஐஓடி) ‘சமுத்ரயான்’ திட்டத்தை செயல்படுத்த திட்டமிட்டுள்ளது. இதற்கு ‘மத்ஸ்யா 6000’ என்று பெயரிடப்பட்டுள்ளது.

முற்றிலும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டுவரும் இதில் 3 மனிதர்களை அனுப்ப திட்டமிடப்பட்டுள்ளது. கோபால்ட், நிக்கல், மாங்கனீஸ், ஹைட்ரோதெர்மல் சல்பைடு மற்றும் காஸ் ஹைட்ரேட்ஸ் உள்ளிட்ட தாதுப் பொருட்கள் வங்கக்

கடலின் ஆழ்பகுதியில் இருக்கிறதா என ஆய்வு செய்வது தான் இந்த திட்டத்தின் நோக்கம்.

வடக்கு அட்லான்டிக் கடல் பகுதியில் மூழ்கிய டைட்டானிக் கப்பல் பாகங்களை பார்வையிடுவதற்காக 5 பயணிகளை சுற்றுலா அழைத்துச் சென்ற டைட்டன் கப்பல் கடந்த ஜூன் மாதம் வெடித்துச் சிதறியது. அதில் பயணித்த 5 பேரும் உயிரிழந்தனர். இதையடுத்து, மத்ஸ்யா கலத்தின் வடிவமைப்பு, அதில் பயன்படுத்தப்படும் பொருட்கள் உள்ளிட்டவற்றை விஞ்ஞானிகள் மறுஆய்வு செய்து வருகின்றனர்.

இதுகுறித்து மத்திய புவி அறிவியல் அமைச்சக செயலாளர் எம்.ரவிச்சந்திரன் கூறும்போது, “மத்ஸ்யா நீர்மூழ்கி வாகனத்தின் முதல்கட்ட சோதனை அடுத்த ஆண்டு தொடக்கத்தில் நடைபெறும். சென்னை கடற்கரைக்கு அருகே வங்கக் கடலுக்குள் 500 மீட்டர் ஆழம் வரை இந்த சோதனை மேற்கொள்ளப்படும்” என்றார்.

என்ஐஓடி இயக்குநர் ஜி.ஏ.ராமதாஸ் கூறும்போது, “மத்ஸ்யா திட்டம் 2026-ம் ஆண்டில் இறுதிகட்டத்தை எட்டும். இந்த நீர்மூழ்கி வாகனத்தை 3 பேர் பயணிக்க வசதியாக 2.1 மீட்டர் விட்டம் கொண்டதாக விஞ்ஞானிகள் உருவாக்கி உள்ளனர்” என்றார்.

இதுவரை அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், பிரான்ஸ் மற்றும் சீனா ஆகிய நாடுகள் மட்டுமே மனிதர்கள் பயணிக்கும் நீர்மூழ்கி வாகனத்தை தயாரித்துள்ளன. அந்த வரிசையில் இந்தியாவும் விரைவில் இணைய உள்ளது.

மத்ஸ்யா என்ற சம்ஸ்கிருத வார்த்தைக்கு மீன் என பொருள். விஷ்ணுவின் 10 அவதாரங்களில் முதலாவது அவதாரம் மச்ச அவதாரம் ஆகும். இதனடிப்படையில்தான் ஆழ்கடல் திட்டத்துக்கு மத்ஸ்யா என பெயரிட்டதாகக் கூறப்படுகிறது.

## உலகக் கோப்பை வில்வித்தையில் வெள்ளி வென்றார் பிரதமேஷ் ஜாவ்கர்



**ஹெர்மோசில்லோ:** உலகக் கோப்பை வில்வித்தையில் இந்தியாவின் பிரதமேஷ் ஜாவ்கர் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

உலகக் கோப்பை வில்வித்தை போட்டி மெக்சிகோவின் ஹெர்மோசில்லோவில் நடைபெற்று வருகிறது. இதில் ஆடவருக்கான காம்பவுண்ட் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் பிரதமேஷ் ஜாவ்கர், டென்மார்க்கின் மத்தியாஸ் புல்லர்டனை எதிர்த்து விளையாடினார். இதில் இருவரும் தலா 148 புள்ளிகள் குவித்தனர். இதனால் வெற்றியை தீர்மானிக்க ஷூட் ஆஃப் கடைபிடிக்கப்பட்டது.

இதிலும் இருவரும் தலா 10 புள்ளிகள் பெற்றனர். எனினும் மத்தியாஸ் புல்லர்டன் செலுத்திய அம்பு மையப்பகுதிக்கு மிக அருகாமையில் இருந்ததால் அவர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. 2-வது இடம் பிடித்த பிரதமேஷ் ஜாவ்கர் வெள்ளிப் பதக்கம் பெற்றார். வெண்கலப் பதக்கத்துக்கான ஆட்டத்தில் நெதர்லாந்தின் மைக் ஸ்க்லோசர் 150-149 என்ற கணக்கில் இந்தியாவின் அபிஷேக் வர்மாவை தோற்கடித்தார்.

மகளிருக்கான காம்பவுண்ட் பிரிவில் இந்தியாவின் அதிதி சுவாமி, ஜோதி சுரேகா ஆகியோர் முதல் சுற்றிலேயே தோல்வி அடைந்தனர்.

**'டோலி' குளோனிங் ஆட்டை உருவாக்கிய குழுவை வழிநடத்திய பிரிட்டிஷ் விஞ்ஞானி காலமானார்**


இயன் வில்முட்

**எடின்பர்க்:** கடந்த 1996-ல் குளோனிங் முறையில் டோலி எனும் ஆடு உருவாக்கப்பட்டது. இந்த பணியில் ஈடுபட்ட குழுவை வழிநடத்திய பிரிட்டிஷ் விஞ்ஞானி இயன் வில்முட் காலமானார். அவருக்கு வயது 79.

அவர் உயிரிழந்த தகவலை ஸ்காட்லாந்தில் உள்ள எடின்பர்க் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது. இது குறித்து அவர் உலகுக்கு அறிவித்த போது அது பெரிய அளவில் விவாதத்தை ஏற்படுத்தியது. முதலில் இந்த ஆடு '6LL3' என அறியப்பட்டது. அதன் பின்னர் அமெரிக்க பாடகர் டோலி பார்ட்டனின் நினைவாக டோலி என்று பெயரிடப்பட்டது. இது விஞ்ஞான புரட்சியாகவும் பார்க்கப்பட்டது.

குளோனிங் என்பது உயிரியலில் படியெடுப்பு (Cloning). அதாவது, ஒரு உயிரினத்தை மரபியல் ரீதியில் அப்படியே உருவாக்குவது. உயிரணு

மூலக்கூறுகள், உயிரணுக்கள் போன்றவற்றை மூதாதையிலிருந்து உருவாக்கும் செயல்முறையே குளோனிங் என அறியப்படுகிறது.

பார்கின்சன் நோயின் காரணமாக அவர் நேற்று (செப். 10) உயிரிழந்தார். “டோலி ஒரு போனஸ். சில நேரங்களில் விஞ்ஞானிகள் கடினமாக உழைக்கும்போது அவர்களுக்கு அதிர்ஷ்டம் கிடைக்கும். அப்படித்தான் அது நடந்தது” என முன்பு ஒரு பேட்டியில் அவர் தெரிவித்தார்.

EVA STALIN IAS ACADEMY